பஜ வண்ணத் மந்திரக் கீர்த்தனம்.

4

C

O28:4W
M24
181858

உ

சிவமயம்.

பரமசிவன்பேரில் பாடுதற்கினிய

# பரமானந்த

# பக்திரசக்கீர்த்தனம்

இஃது,

சேலம். சு. சுந்தரேச நாயகரால்

இயற்றியது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
5- DEC 1924
MADRAS

ஆ. ப. வை. கோதண்டராமபாண்டிய நாடாரால்

சென்னை.

விநோதவிகடன்பிரஸில் பதிப்பிக்கப்பட்டது

1924

ரிஜிஸ்டர் காபிரைட்

, வண்ணாரப்பேட்டை மதரூஸ்.

Q23:4D
N24
181858

உ

சிவமயம்.

பரமசிவன் பேரில் பாடுதற்கினிய

# பரமானந்த

# பக்திரசக் கீர்த்தனம்.

விநாயகர் காப்பு வெண்பா.

திருமதுரைநகர்வாழும் செல்வக்கணபதியுன்
பெருமைகளையான்புகழ்ந்துப் பேசுதற்கு—ஒருமனதாய்
என்னுவினிலிருந்து இனியதமிழதைப்பெருக்கி
கண்போலென்னை மதித்துக்கார்.

## கீர்த்தனம்.

துலங்கு செம்பொன் என்ற வர்ணமெட்டு.

சுதந்தரத்திருப்பாதமளித்திட
  சுவாமீவந்தருள்சோம
சுந்தரேசக்கடவுளே—மீனாட்சிபாக
  சுந்தரேசக்கடவுளே—என்
சோகமகற்றிமுன் தாகந்தனித்துநற்
  போகமளித்திட வேகமாய்வந்தருள்
சுந்தரேசக்கடவுளே—தென்மதுரைவாழ்
  சுந்தரேசக்கடவுளே. 1

கலங்குகின்றது காதில்புகுந்தும் நீர்
  காணுதவரைப்போல
கருதாதிருப்பதழகா கருணைவாய்ந்த
  காமதகனதிலகா—உனைக்
காண்பதுவரிதெனதேன் மலரடிகளை
  நான்மனந்தனில் துதித்தேனெனைக்கோரிமுன்
கடுகவந்தருள்நாதனே—பாண்டிநகர்வாழ்
  கமலசுந்தரப் பாதனே. 2

சுகந்தபரிமள மலர்களையணிந்திடும்
  சுவாமீபரமானந்த
சுந்தரராஜபூபனே—மீனாட்சிசோம
  சுந்தரராஜபூபனே—நற்

சுருதிகளனுதினம் கருதிடவடியவர்
ஒருதிடமனதுடன் திருவடிகளைக்கோரி
உருகிப்பாடிடத்திருவாய் மலர்ந்தருளும்
உத்தமனேவந்தருள்வாய். 3

(வேறு.)

தேவாதிதேவ திருச்செந்தில் வாசனே என்ற மெட்டு.

பல்லவி.

ஈசாவிரக்கம்வைப்பாய் ஏழையின்மேலே—ஈசா

அநுபல்லவி.

ஏழையின்மேலே ஏங்கும் கோழைதன்பாலே—ஈசா

சரணங்கள்.

ஆசாபாசந்தவிர்த்து அல்லலெலா மொழித்து
கூசாதுனைத்துதித்துக் கோரிவந்தேன் பஜித்து
குறைகளைத்தீரும் திருவருளதைத்தாரும்—எந்தன்

குருவேதிருவே அருவேபெரிய
உருவேகற்பகத் தருவேகயிலே ஈசா

1. காமன்கணையால்நன்று கட்டுண்டுலகில்நின்று
ஏமன்வருவானென்று இன்பமெலாமகன்று
ஏங்கிநின்றேனே மிடித் தாங்குகின்றேனே—எனக்

கின்பம்வருக அன்புபெருக
முன்புதருக துன்பங்கருக ஈசா

2. சஞ்சலத்தால்மெலிந்து சாமியுனைப்பணிந்து
தஞ்சமென்றேன்கனிந்து தாரும்வரந்துணிந்து
தருணமீதையா என்மேல் கருணைவை மெய்யா—இத்

தரைதனிலெனக் கொருவருந்துணை
வருவதியுன் றிருவருள்தா ஈசா

3. சந்திரசேகரனே சாமிக்ருபாகரனே
சுந்தரவீஸ்வரனே சோகந்தீர் பாஸ்கரனே
சுகந்தருவாயோ எந்தன் அகம்வருவாயோ—உயர்

சுகுணசுந்திர சொருபமந்திர
ககனசந்திர கருணையெந்திர ஈசா

---

(வேறு.)

பரமானந்த மெய்ப்பரங் குன்றேன் என்ற மெட்டு.

ஓரடிப்பதம்.

பல்லவி.

பிறவாமுத்தியருளல்வேண்டும்—பேரானந்தந்தரும்
பிறவாமுத்தியருளல்வேண்டும்

அநுபல்லவி.

பிரமன்சிரமதனைப் பிடித்தறுத்தவனே
பேய்களின்நடுவினில் நடம்புரிந்தவனே
சிரங்களையாரமாய்ப் பூண்டிருப்பவனே
சித்தஜன்றனைவிழித் தெரித்தசிற்பரனே பிறவா

சரணங்கள்.

சிரித்தேதிரிபுரத்தையன்று சினத்தெழுந்து
எரித்தேசாம்பலாக்கினைக் கொன்று யானையின்றோலை
உரித்தேவுளமகிழ நன்று விரித்ததனை
தரித்தேதில்லைப்பதியிற்சென்று மாகாளிதாழ

பத்தர்கள் மூத்தர்கள் சித்தர்கள் சுற்றிடப்பாரில்
காலொன்றைத் தூக்கி
மெத்தவும்சத்தியவுத்தமர் நத்திடநேரில்
நடனஞ்செய்து
அத்திமுகத்தனிடத்து வடுத்துதன்மாரில்
அணைந்தவரை
உத்தமபத்திநித்தவ ளித்துடன்சேரில்
உமைபூரித்து

பொங்கியேசடை கங்கையுந்திரு மங்கையும்மிக
சங்கடங்கொளநின்றன் கண்ணதைமூட
அங்கியும்ஒளி மங்கியும்மிகக் குங்கியும்அங்கு
தங்கியுந்தளர்ந்தன்று மனமுழன்று
எங்கேயுமிருள் தங்கியும்மலர் மங்கையும்சசி
நங்கையும்பயங்கொண்டு மிகவெருண்டு
பங்கயன்பணிதங்கியும்மனம் குங்கியும் திரம்
மங்கியுமிருந்தேங்க உலகுமேங்கி

தத்தளித்தனித்தியத்து ருத்தியிதெனத்தெளிந் துணைத்தொ
தினித்திருப்பதைத் தெரிந்தணைத்தவரைக் கார்த்தாய் [மூ
மோக்ஷத்தில் சேர்த்தாய்

அன்றுமுதலின்றளவும் நன்றுவழிசென்றவர்கள்
உன்றனைப்புகன்றுதினம் சென்றுதொழ மன்றில்நின்றுதானே
அருள்செய்வோனே

பூதலமீதினில் பாதகமேசெயும் காதகர்தங்களை
வாதனைசெய்திடுங்காலன் மகானுகூலன்

சாதலெனக்குறும் போதுவரில் தவிர்த்
தாதரித்தாளவிப் போதுனைவேண்டி னேன்யானே
கேளுமெங்கோனே

18858

ஜனிததுமரிக்கும் அனித்ய துருத்தி
ஜடமிதைநான்மிக திடமெனவேபவ
சாகரந்தனிலிடைமூழ்கி

இனித்திடுமொழிவளை பிணித்திடுமாதர்கள்
இத்தரைமீதினில் மெத்தவே மாற்றிடநொந்து
மனந்தெளிந்து

இந்திரன்சந்திரன்முதல் அந்தரர்நிதந்துதிக்கும்
சந்திரசேகரனெனும் எந்தையேநினதடியை
சொந்தமெனவேநினைந்து சந்ததந்துதிக்குமுந்தன்
மைந்தன்சுந்தரேசனுய்ய இந்தவேளைவந்துலகில் பிற

(வேறு.)

குமரனையே பாடிகொண் டாடுவோமே என்ற மெட்டு.

பல்லவி.

பரமசிவாவுந்தன் பாதாம்புயம் பணிந்தேன் பர

அநுபல்லவி.

கரங்களில்மானையேந்தி கருணையுடன்ரக்ஷிக்கும்
அரகரசிவவென அன்பர்களெலாம்பஜிக்கும் பர

(தோஹரு.)

சிரமேற்கரங்கூப்பி அரனேயுன்னிருபாதம்
தருவாயென்றே பணிந்தேன்
[illegible]லோகபதவியில் ஸ்திரமாகவைக்கநின்
இருபாததாளணிந்தேன்

(பாட்டு.)

பிறந்துபிறந்துமனம் பேதளித்துனைதினம்
[illegible] மைங்கக்கணம் மாய்ந்தேனுலகில்முனம் பர

(தோஹரு.)

மிருகாதிஜனனங்கள் நிருவாகமதுபோல
விருதாவில் னோந்தேன்பாரே
குருவேநின்பிறவாத திருமேனியதனோடு
வரவேண்டுமெந்தன்னேரே

(பாட்டு.)

அந்தரிமீனாட்சிசோம சுந்தரேசாவென்றுநிதம்
வந்ததுன்பம்யாவுந்தீர எந்தநேரத்திலுமன்பாய் பர

(வேறு.)

பரமேஸ்வரியின் பேரில்

பாண்டியன் ஈன்ற மீனாட்சி என்ற வர்ணமெட்டு.

(பாட்டு.)

கார்த்தருள் கனகசாம்பவியே கைலைவாழ்
கற்பகாம்பிகையே
கனகபா லீஸ்வரன்சதியே கதியிலை
காரும் அம்பிகையே கார்த்த

(தோஹரு.)

கனவாமிவ்வுலகினிற் றினம்நான்மையல்கொண்டு
கௌரியேவுனை மறந்தேன்
மனமாய்கைதனில்சிக்கி கனஞானசுகம்விண்டு
மண்ணிற் பிறந்திறந்தேன்

(பாட்டு.)

மலைமன்னன் மகிழுங்கற்பகமே கனசுக
மருளுஞ்சிற்பரமே கார்த்த

(தோஹரு.)

முன்னாளில்பாண்டியன் பெண்ணாயுதித்துலக
மூன்றையும் வென்றபின்பே
மண்ணாதிமன்னர்கள் கண்ணிற்கண்டஞ்சமா
மதுரையை யாண்டவிண்பே

(பாட்டு.)

சந்ததம் சுந்தரேசனைக்கார் உறவுடன்
வந்தவல் வினைத்தீர்

(வேறு.)

மாரனே தீரனே என்ற வர்ணமெட்டு.

கங்கையைத்தரித்தசிவ சங்கரனுருவிலொரு
பங்கெனவவதரித்த திங்களொளிவே
மங்களம்நிறைந்தவொளிர் செங்கமலமெனுமுயர்
பங்கஜவடியதனை எங்களுக்கீவாய் கங்கை

மலையரசன்றவவத்தில் கலைகள்பலவுடைய
சிலையதுபோலுதித்தக் குலவடிவே
அலைகடலுலகினில் நிலையெனநினதடி
களைப்பிடித்திடவருள் மலையமுதே. கங்கை

எத்தனைவிதங்களினும் உத்தமிநினதடியை
பத்திசெய்யமனமது ஒத்துவல்லையே
அத்திமுகன்றனையீன்ற சத்திபரமேஸ்வரியே
நித்தமும்வித்தைப்பெருக சித்தம்வைத்தருள் கங்கை

அவ்வையெனும்மாதரசி எவ்வளவோகவிதைகள்
இவ்வுலகத்தோர்படிக்கச் செவ்வையாய்செய்தாள்
அவ்வருமைவித்தையெலாம் செவ்விதம்படைத்தவளே
எவ்விதமும்வரவருள் திவ்வியமதாய் கங்கை

சுந்தரேசன்சந்ததமும் உந்தனைசிந்திப்பதெண்ணி
செந்தமிழந்தமுடனே வந்திடச்செய்வாய்
சந்திரன்றனைப்பழிக்கும் அந்தமுளசுந்தரியே
எந்தனிடநாவில்குடி வந்துபுகுவாய் கங்கை

(வேறு.)

வேலனே இந்த வீணனை ஏன்படைத்தாய் என்ற மெட்டு.

பல்லவி.

தேவியேயிந்தப் பாவியை ஏன்படைத்தாய்—மனந்
தெளியாதிழி வழியேகியே பழியேசெயுங் கொடியோனெனும்- பா

அநுபல்லவி.

ஆவிபதற வனுதினமுங்கொலை
அதுவேசெயும் மதமேவிய
பதாகியகொடியோனெனும்
பாவியை ஏன்படைத்தாய்

## சரணங்கள்.

1. பத்தர்கள்போற்றும் பராசத்தியேவுந்தன்
சித்தத்தின்படித் திருந்தாதிருந்தெந்தன்
புத்தியின்போக்காய் புலைத்தொழில்செய்மந்தன்
புனிதாளெனுங் குணவான்களை பணியாதிகழ் கொடியோனெ
பாவியை ஏன்படைத்தாய் [னும்

2. பாழும்பணத்தைப் பகலிரவாய்த்தேடி
வாழும்மனத்தை மறலிப்பிடித்தோடி
வீழும்பிணத்தின் விணைப்பிணங்கள்கூடி
விலகாமலே பலமாயழும் உலகாயுதக் கொடியோர்நிகர்
பாவியை ஏன்படைத்தாய்

3. அந்தரியேவுனை எந்தநாளும்அக
சொந்தமென்றெண்ணாமல் அந்தகனைய்ஜெக
பந்தத்திலாழ்ந்திடும் சுந்தரேசன்மிக
பணியாசிரங் குனியாபுக ழுணியாய்பெருங் கொடியோனெனும்
பாவியை ஏன்படைத்தாய்

(வேறு.)

மோதிரத்தைப் பாருமையா என்ற வர்ணமெட்டு.

அம்பாமீனாட்சிதாயே அடைக்கலம் அம்பாமீனாட்சிதாயே
அம்பாமீனாட்சியுன் அடைக்கலம் நான்புகுந்தேன்
சம்பாதிக்கும்வழியைத் தெம்பாயருள் புரிவாய் அம்

அன்னமிலாமல்தினம் அலைகின்றோம் அன்னமிலாமல்தினம்
அன்னமிலாததினால் சின்னக் குழந்தையெலாம்
உன்னை தினம்நினைந்து கண்ணீர்விட் டழுகுதே அம்

கட்டத்துணியுமின்றி கலங்குரோம் கட்டத்துணியுமின்றி
கட்டத்துணியிலாமல் பட்டப் பகலதனில்
எட்டிவைத்திட அச்சம் கட்டிப்போடுதே காலை அம்

எத்திசையுந்துதிக்கும் ஈஸ்வரியே எத்திசையுந்துதிக்கும்
எத்திசையுந்துதிக்கும் உத்தமியே நினது
பத்தன்படுந்துயரைப் பார்த்து மனமிரங்கும் அம்

விந்தைமதுராபுரி மீனாம்பிகா விந்தைமதுராபுரி
விந்தைமதுராபுரி சுந்தரேசர் தனது
சொந்ததேவியேயிங்கு வந்தவறுமை தீர்ப்பாய் அம்

முற்றிற்று.

181858

9A
10-19